IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: SOP.1/2023
DEPOSITION OF WITNESS: RW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | செல்வராணி | Caste/ஜாதி | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | சிவலிங்கம் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | கீழ்புதுப்பாக்கம் | Religion/ சமயம் | : | |
| Taluk/தாலுக்கா | : | செய்யாறு | Age/வயது | : | 45 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 2nd day of December 2024

**எ.ம.சா.1 குறுக்கு விசாரணை**

நான் தற்சமயம் சென்னையில் வசித்து வருகிறேன். எனக்கு 2 மகள்கள் ஆகும். முதல் மகளின் பெயர் மெர்லின் சந்திரலேகா ஆகும். 2ம் மகளின் பெயர் ஜாக்குளின் ஜெசிகா ஆகும். முதல் மகள் 16.10.1992 அன்றும் 2ம் மகள் 09.10.1994 அன்றும் பிறந்தார்கள். முதல் மகள் பண்ருட்டியிலும் 2ம் மகள் கடலூரிலும் பிறந்தார்கள். அவர்களது தந்தை சேகர் ஆகும். எனது மகள்கள் சென்னையில் தான் வசிக்கிறார்கள். இருவரும் திருமணமாகி தங்களது கணவருடன் வசிக்கிறார்கள். எனக்கும் சேகருக்கும் விவாகரத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணம் சிவலிங்கத்தின் இறப்பு சான்றிதழ் ஆகும். ம.சா.ஆ. 3 ஆவணம் சிவலிங்கத்தின் வாரிசு சான்றிதழ் என்றால் சரிதான். அதில் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணம் சிவலிங்கத்திற்கும் ஜான்சிராணிக்கும் நடந்த திருமணத்தின் திருமண பத்திரிக்கை என்றால் சரிதான். சிவலிங்கத்திற்கும் ஜான்சிராணிக்கும் சரண்யா என்ற மகள் உள்ளார் என்றாலும் அவருடைய பிறப்பு சான்றிதழ் தான் ம.சா.ஆ. 5 என்றால் சரிதான். வந்தவாசி வட்டாட்சியரின் சான்றிதழில் வாரிசாக நான் குறிப்பிடவில்லை என்பதால் எனக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே மனுப்படி உத்திரவிட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.